தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## சாரதி — பதவிகளின் எண்ணிக்கை : 03

சேவைப் பிரிவு: **PL 3**

## பதவியின் தன்மை

- கையளிக்கப்படும் நிறுவனத்தின் வாகனங்களை அவதானமாகவும் கவனத்துடனும் செலுத்துவதுடன் அதன் பொறுப்பை ஏற்றல்.
- வாகனங்களை உரிய காலத்தில் சேவைகளுக்கு/ திருத்த வேலைகளுக்கு உட்படுத்துதல்.
- வாகனங்களில் ஏற்படும் சிறிய திருத்தங்களைச் சரிசெய்தல் மற்றும் தேவையான பராமரிப்புப் பணிகளை நிறைவேற்றல்.
- கையளிக்கப்படும் வாகனத்தில் பொருத்தப்படும் உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் தொடர்பிலும் அவற்றின் பாதுகாப்புத் தொடர்பிலும் பொறுப்பேற்றல்.
- வாகன ஓட்டக் குறிப்பேடுகளை உரியவாறு இற்றைப்படுத்திப் பேணுவதுடன், அன்றாடம் அவற்றை வாகனங்களுக்குப் பொறுப்பான அதிகாரியிடம் சமர்ப்பித்து பரிசோதித்துக் கொள்ளல்.
- வாகனம் செலுத்தும் போது ஏற்படும் திடீர் விபத்துக்கள் தொடர்பில் உடனடியாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் அதிகாரி/ அதிகாரிகளினால் நிறுவனத்தின் சேவைத் தேவைக்கு ஏற்ப ஒப்படைக்கப்படும் ஏனைய பல்வேறு பணிகளை நிறைவேற்றல்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

## தகைமைகள் (கீழ்வரும் 1 அல்லது 2)

**1. கல்வித் தகைமைகள் :**

- க.பொ.த (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2. **தேர்ச்சிகள்:**

- மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றதன் பின்னர் வாகனம் செலுத்துவது தொடர்பில் குறைந்தது மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## வயதெல்லை

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

---

## சம்பள அளவுத்திட்டம்

**PL 3 - 2025 – ரூ. (43,280 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - 67,040)**

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)

Gazette.lk AMBITIONS REALIZED
SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED